# பரீட்சகரின் அறிக்கை

## AA2 பரீட்சை – 2020 சனவரி

## (AA25) வியாபாரச் சட்டமும் ஒழுக்கநெறிகளும்

## பகுதி A

### வினா இல. 01

இவ்வினா 20 புள்ளிகளுக்கான 10 OTQs இனைக் கொண்டிருந்தது.

இவ்வினாவுக்கு பெரும்பாலும் அனைத்துப் பரீட்சார்த்திகளும் விடையளிக்க முயற்சித்திருந்தனர். அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்தப் புள்ளிகளில் அதிகளவான புள்ளிகளைப் பெற்றிருந்தனர்.

குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் வினா இலக்கம் **1.9** இற்குச் சரியாக விடையளிக்கத் தவறியிருந்ததை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. இவ்வினா பிணையங்கள் மற்றும் பரிமாற்ற ஆணைக்குழுவின் தொழிற்பாடுகள் மீதான அறிவைப் பரீட்சித்திருந்தது.

சராசரி எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கவில்லை. சில பரீட்சார்த்திகள் இவ்வினாவுடன் எவ்வித சம்பந்தமுமற்ற விடைகளை வழங்கியிருந்தனர்.

இலங்கையிலுள்ள சட்டங்கள் மற்றும் ஒழுங்குபடுத்தல் வேலைச் சட்டகங்களில் நல்ல விளக்கத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும். பாடப்புத்தகத்தைப் படிப்பதன் மூலம் சர்வதேச வர்த்தகம், ஒப்பந்தச் சட்டம், பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டம் போன்றவற்றில் ஆழமான அறிவைக் பெற்றுக்கொள்ள முடியும் என்பதுடன் அது பகுதி A யில் உயர்ந்தளவு புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உதவும். ஏனெனில் இது, சித்திப் புள்ளியை அடைவதற்கு பெரியளவில் பங்களிப்புச் செய்யும் பகுதியாகும்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

## பகுதி B

### வினா இல. 02

இவ்வினா பங்குடமைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்ததுடன் தரப்பட்ட விவரணத்துடன் தொடர்புபட்டதாக பங்காளர்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் இது பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவை விளங்கிக்கொண்டிருந்ததுடன் **சொய்சாவின்** கடமைகளையும் **பெரேராவின்** சட்ட உரிமைகளையும் விளக்கியிருந்தனர். சில பரீட்சார்த்திகள் மாத்திரமே சரியான விடையை வழங்கவில்லை.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

### வினா இல. 03

இவ்வினா நேரடியான ஒரு கோட்பாட்டு வினாவாகும். இவ்வினா கணக்காளரின் தொழிலுடன் தொடர்புடைய நெறிமுறை வழிகாட்டல்கள் மீதான அறிவைப் பரீட்சித்திருந்தது. இது பாடப் புத்தகத்திலிருந்து நேரடியாகப் பரீட்சிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகளவான பரீட்சார்த்திகள் விடையளிக்கவில்லை. இது, பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னர் பரீட்சார்த்திகள் பாடப்புத்தகத்தை நன்றாகப் படிக்கவில்லை என்பதையே காட்டுகிறது.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை.**

**வினா இல. 04**

இது சர்வதேச வர்த்தகத்துடன் தொடர்புடைய இலகுவான நேரடி வினாவாக இருந்தது. இதில் வார்நாமத்தின் தொழிற்பாடுகள் பரீட்சிக்கப்பட்டன. சில பரீட்சார்த்திகள் சரியான விடை அளித்திருந்தனர். எவ்வாறாயினும், வினாவைச் சரியாக வாசிக்காது, சில பரீட்சார்த்திகள் வார்நாமத்தின் வரைவிலக்கணத்தை எழுதியிருந்ததுடன் சில மாணவர்கள் இவ்வினாவுக்கு விடையளிக்க முயற்சித்திருக்கவும் இல்லை.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை.**

**வினா இல. 05**

இவ்வினா முகவராண்மைச் சட்டம் தொடர்பான அறிவைப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் முதல்வர் முகவர் உறவு உருவாகக்கூடிய வழிவகைகளை வழங்கி முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

**வினா இல. 06**

இவ்வினா பாடப்புத்தகத்திலிருந்து நேரடியாகக் கேட்கப்பட்டிருந்தது. பெரும்பாலான மாணவர்கள் வினாவை விளங்கிக்கொள்ளவில்லை. உண்டியலொன்றை காலக்கிரமத்தில் வைத்திருப்பவர் ஒருவராவதற்கு நிறைவு செய்யப்பட வேண்டிய தேவைப்பாடுகள் பற்றி இங்கு வினவப்பட்டது. எவ்வாறாயினும், சில பரீட்சார்த்திகள் வினாவில் என்ன கேட்கப்பட்டது என்பதைக் கருத்திற்கொள்ளாமல் உண்டியல் என்றால் என்ன, உண்டியலின் பயன்பாடுகள் போன்றவற்றை எழுதியிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக அமையவில்லை.**

## <u>பகுதி - C</u>

**வினா இல. 07**

இவ்வினா காப்புறுதிச் சட்டம் தொடர்பான அறிவைப் பரீட்சித்தது. அதிகமான பரீட்சார்த்திகள் இந்த வினாவின் **பகுதி (a)** மற்றும் **பகுதி (B)** இற்காக தங்களது கோட்பாட்டு ரீதியான அறிவைப் பிரயோகித்து முழுப் புள்ளிகளையும் பெற்றுக்கொண்டனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

**வினா இல. 08**

இது தொழிற் சட்டத்துடன் தொடர்புடைய சற்று இலகுவானதொரு வினாவாகும்.

**பகுதி (a)**: அதிகமான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளிக்கவில்லை என்பதுடன் சில பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**பகுதி (b):** இப்பகுதி பணிக்கொடை தொடர்பான கணிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் சரியாக கணிப்பீட்டினை மேற்கொண்டிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

**வினா இல. 09**

இது பணச் சலவை மற்றும் புலமைச் சொத்துக்கள் தொடர்பான சற்று இலகுவான ஒரு நேரடி வினாவாகும்.

**பகுதி (a):** குறிப்பிடத்தக்களவு பரீட்சார்த்திகள் இப்பகுதிக்குச் சரியாக விடையளித்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் ஒன்று / இரண்டு விடயங்களையே பல வழிகளில் விடைகளாக எழுதியிருந்தனர். இதனால் அவர்களால் இவ்வினாவுக்கு ஒதுக்கப்பட்ட முழுப் புள்ளிகளையும் பெற முடியவில்லை.

**பகுதி (b):** இது புலமைச் சொத்துக்கள் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது. பெரும்பாலும் சகல பரீட்சார்த்திகளும் குறியீடுகள் மற்றும் வர்த்தக நாமம் ஆகிய பதங்களை விளக்கியிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

## <u>பகுதி - D</u>

**வினா இல. 10**

இவ்வினா இரண்டு பகுதிகளைக் கொண்டிருந்தது.

**பகுதி A:** இந்தப் பகுதி ஒப்பந்தச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

**(a)** இங்கு விருப்பறிவிப்பு ஒன்று காணப்படவில்லை என்பதுடன் அது கொடைமுனைவுக்கான அழைப்புடன் தொடர்புடையது என்பதால் இங்கு செல்லுபடியானதோர் ஒப்பந்தம் இல்லை எனப் பெரும்பாலான பரீட்சார்த்திகள் குறிப்பிட்டிருந்தனர்.

**(b)** குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடைகளை வழங்கியிருந்ததுடன் அவர்கள் ஒப்பந்தச் சட்டம் தொடர்பான முக்கிய பிறழ்பகர்வு எண்ணக்கருவை ஏற்பிசைவு செய்திருக்க வில்லை. ஆனால் சில பரீட்சார்த்திகள் **சாரா** பயணக் கம்பனியிடமிருந்து சேதத்திற்கான நட்டஈட்டைக் கோர முடியும் என்ற சரியான விடையை விளக்கியிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை சராசரி மட்டத்தில் இருந்தது.**

இவ்வினாவின் **பகுதி (B)** ஆனது பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

இந்த விவரணம் ''விற்பனையாளர் விற்பனை செய்வதற்கான உரிய உரிமையைக் கொண்டிருக்க வேண்டும்'' என்ற பொருட்கள் விற்பனைக் கட்டளைச் சட்டத்தின் உட்கிடை நிபந்தனை ஒன்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது.

பெரும்பாலான பரீட்சார்த்திகள் இந்த நிபந்தனையை அடையாளங் கண்டிருந்ததுடன் அதனை நன்கு விளங்கப்படுத்தியுமிருந்தனர்.

**ஒட்டுமொத்தத்தில் இவ்வினாவுக்கான செயலாற்றுகை திருப்திகரமாக இருந்தது.**

- - -

**<u>பரீட்சார்த்திகளின் ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு கவனத்திற்கொள்ள வேண்டிய பொதுவான விடயங்கள்:</u>**

**(1)** பாடத்திட்டத்தை முழுமையாகப் படிப்பதுடன் அடிக்கடி பரீட்சிக்கப்படும் விடயங்கள் மீது கூடிய கவனத்தையும் செலுத்தவும்.

**(2)** வினாவை மிகக் கவனத்துடன் வாசித்து, வினாவில் கேட்கப்பட்டதற்கு மாத்திரம் விடை அளிக்கவும்.

**(3)** வினைச் சொல் நிரல் ஒன்று வினாப்பத்திரத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. நோக்கச் சோதனை வினாக்களைத் தவிர ஏனைய ஒவ்வொரு வினாவும் ஒவ்வொரு வினைச்சொல்லினைக் கொண்டிருக்கிறது. பரீட்சார்த்திகள் வினைச் சொல் நிரலில் தரப்பட்ட வினைச்சொல்லின் வரைவிலக்கணத்தை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.

**(4)** சுய கற்றல் பாடநூல், மேலதிக புத்தகங்கள், சஞ்சிகைகள் மற்றும் பாடத்துடன் சம்பந்தப்பட்ட ஏனையவற்றை படிக்கவும்.

**(5)** விடையெழுதும்போது சரியாக அடையாளம் கண்டு அவற்றை அடிப்படைக் கோட்பாட்டு எண்ணக் கருக்களுடன் ஒப்பிடுவதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

**(6)** கையெழுத்து தெளிவாக இருப்பதையும் வினா இலக்கங்கள் துல்லியமாக எழுதப்பட்டிருப்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

**(7)** வினாப்பத்திரத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கடைப்பிடியுங்கள்.

**(8)** கடந்தகால வினாப்பத்திரங்கள் மற்றும் விடைகளைக் கற்பதன் மூலம் உங்கள் அறிவினை மேம்படுத்திக் கொள்ளுங்கள்.

**(9)** முறையான நேர முகாமை.

**(10)** விடைப்பத்திரங்களை ஒப்படைப்பதற்கு முன் வினா இலகங்களும் சுட்டெண்ணும் உரியவாறு உரிய இடங்களில் இடப்பட்டுள்ளனவா என்பதை முறையாகப் பரீட்சியுங்கள்.

**(11)** முன்னாயத்தத்துடனும் வெற்றியடையும் எதிர்பார்ப்புடனும் பரீட்சைக்குத் தோற்றுங்கள்.

- * * * -